அடிப்படையில் நாம் ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும் என்ற ஒரு முற்போக்கான கருத்தையும் அந்த அடிப்படையிலும் மாணவர்களுக்கு ஒழுங்கைச் சொல்லித் தருவதற்கு முயற்சியை மேற் கொண்டிருக்கிறார்கள். நீதி போதனை, ஒழுக்கக் கல்வி என்பதோடு சமுதாயக் கல்வியையும் தர வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தத்தான் புதிதாக ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. இன்று மத்திய கல்வி அமைச்சரின் கல்வி ஆலோசகரான திரு. ஜோஷி அவர்கள் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்களை நாம் சொல்லியிருக்கிறோம். அதற்காக நாம் மதத்தை கூடாது என்று சொல்லவில்லை. அதைப் பற்றி நாம் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் ஒரு பக்கம் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்தக் கருத்தையும் ஒரு பக்கம் சொல்லி சமுதாய நோக்கில் மாணவர்களை வளர்க்க விரும்புகிறோம். மதக் கருத்துக்கள், ஒழுங்காக இருக்க வேண்டும் என்பதற்காக அதைப் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு உரிமை இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன்: அண்மைக் காலத்தில் மாணவர்கள் மத்தியில் ஒழுங்கீனம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இலங்கை மலேஷியா போன்ற நாடுகளில் ஒழுக்க போதனையைக் கட்டாய பாடமாக வைத்திருக்கிறார்கள். அதேபோல் இங்கும் உயர்நிலைப் பள்ளிகளில் அதைக் கட்டாய பாடமாக வைத்து அதில் தேர்வு எழுதச் செய்வதற்குண்டான அறிவிப்பை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒழுக்கப் போதனை இப்போது கட்டாய பாடந்தான். அதை ஒரு பீரியேட் சொல்லித் தர வேண்டும். மாணவர்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற முறையில் இருந்து வருகிறது. பரீட்சைக்கு அதை வைத்துக் கொள்ளவில்லை. பரீட்சைக்குரிய பாடமாக அதை ஆக்கவும் நாம் விரும்பவில்லை. ஒழுக்கம் பற்றி நல்ல முறையில் உணரத்தக்க வகையில் சொல்லித் தந்து இயல்பாகவே ஒழுக்கத்தோடு நடந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகிறோம்.

முசிறியில் முன்சிப் நீதி மன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 127—திரு. எம்.கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் முசிறி தாலுகா, முசிறியில் முன்சீப் கோர்ட் அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் என்றால் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம், (ஆ) திருச்சி மாவட்டம் முசிறி தாலுக்காவில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் நிதிநிலைக்கேற்ப 1982–83 ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும்.